முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| OS 108/16 |
| பி.சா.2(தங்கமுத்து) |
| நாள் 01.12.2020 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தாவா சொத்துக்கள் என் மனைவிக்கு அவரின் தந்தை மூலம் பாத்தியப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ 11 முதல் 14 வரையான ஆவணங்களில் என் மாமனாருக்கு அதில் கண்ட சொத்துக்கள் பொதுவில் 4 ஏக்கர் 86 சென்ட் என்று தான் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியாக தெரியாது. என் மாமனாருக்கு ஆவணங்கள் அடிப்படையில் 4 ஏக்கர் 86 சென்ட் தான் பாத்தியம் என்றால் சரிதான். பி.சா.ஆ 16 ஆவணத்தில் என் மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தான் பிரித்துக் கொண்டுள்ளார்கள்.வேறு சொத்துக்களை சேர்க்கவில்லை. என் மாமனாருக்கு 4 ஏக்கர் 86 பாத்தியப்பட்ட நிலையில் என் மனைவிக்கு சரிபாதி தான் பாத்தியம் உண்டு என்றால் சரியல்ல. என் மாமனார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் வாதிகள் தரப்பினராகவோ, சாட்சியாகவோ இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ 15 என் மாமனார் மற்றும் என் மனைவி தன்னிச்சையாக ஏற்படுத்திய ஆவணம் என்றும், அது வாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ 15 ஆவணமே சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 4 ஏக்கர் 86 சென்டில் சரிபாதியை தான் செட்டில்மெ மண்ட் எழுதி வைக்க என் மாமனாருக்கு உரிமை உண்டு என்றும், ஆனால் பி.சா.ஆ 15 ல் வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்ட் சொத்தையும் சேர்த்து 2 ஏக்கர் 63 1/2 செனட்டிற்கு எழுதி வைத்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பொதுவில் பிரிபடாத சொத்துக்களை பொறுத்து குறிப்பிட்ட நான்கு எல்லை கண்டு செட்டில்மெண்ட் ஆவணம் எழுத என் மாமனாருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பி.சா.ஆ 15 செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கே வரவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ 15 ல் வாதியின் நிலத்தையும் சேர்த்து காட்டியுள்ளதால் அது வாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது , செல்லாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ 15 ஐ பொறுத்து என் மனைவியை விசாரித்தால் உண்மையை சொல்லி விடுவார் என்பதால் அவரை விசாரிக்காமல் நான் வந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ 15 ஐ தொடர்ந்து ஏற்படுத்திய பி.சா.ஆ 16 ஆவணமும் செல்லாது மற்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ 16 நடைமுறைக்கே வரவில்லை என்றும், சுவாதீனம் எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 4 ஏக்கர் 86 செட்டிற்கு நடுவில் தண்ணீர் வாய்க்கால் போகிறது

*என்றால் ஓரமாக செல்கிறது. அந்த வாய்க்கால் ரங்கசாமி பங்கில் ஆரம்பித்து எங்கள் நிலம் வழியாக சென்று உேறமமாலினி நிலத்தின் வழியாக சென்று வாதி பழனிசாமி நிலத்திற்கு போகிறது. அந்த கண்ணி வாய்க்கால் வழியாக நாங்களும் வாதி மற்றும் இதர பங்குதாரர்களும் பாசனம் செய்கிறோம். எங்கள் பங்கிற்கு அந்த ஒரே பாசன வாய்க்கால் தான் உள்ளது. அந்த பாசன வாய்க்காலில் வாதி தனது நிலத்திற்கு செல்ல ஆதி காலத்திலேயே பர்மிட் வாங்கியுள்ளார் என்றால் வாதிக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் பர்மிட் வழங்கப்பட்டுள்ளது. அந்த பர்மிட் அடிப்படையில் வாதி கண்ணி வாய்க்காலை பயன்படுத்தி தண்ணீர் பாய்ச்சுவதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. பொதுவில் பிரிபடாத நிலத்தை பொறுத்து அடுத்தடுத்து பொய்யான ஆவணங்களை ஏற்படுததி எங்களுக்கு வரக்கூடிய விகிதாராசத்தை விட அதிகப்படியான நிலத்தை அடைய முயற்சிக்கிறோம் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை தாவா சொத்துக்கள் பொதுவில் தான் அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.*

Uploded by

SS